ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2341 - 2023 ජූලි මස 14 වැනි සිකුරාදා 2023.07.14
*2341 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 656 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 657 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- சமூகப் பாதுகாப்பு உதவு தொகை அறவீடு (திருத்தம்) சட்ட மூலம், 2023 யூன் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**கவனிக்க.**- விசேட வியாபாரப் பண்ட அறவீடு (திருத்தம்) சட்ட மூலம், 2023 யூலை 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூலை மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

655 - B82474 - 5,403(2023/07)

# மாகாண சபை அறிவித்தல்கள்

வடமேல் மாகாண சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான பொது மயானம் மற்றும் தனியார் மயானம் தொடர்பான கட்டளைச் சட்டத்தில் III ஆம் அத்தியாயத்தில் 33 இன் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான சட்டம்) சட்டத்தின் கீழ் இரண்டாம் பிரிவில் II ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் வாசிக்கப்படவேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான பொது மயானம் மற்றும் தனியார் மயானம் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தில் 33 ஆம் பிரிவினால் வடமேல் மாகாணத்தின் ஆளுநர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன ஆகிய எனனால் வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கீழ் காணப்படுகின்ற அட்டவணையில் குறிப்பிட்ப்பட்டுள்ள மயானம் பிணங்களை புதைத்தல் அல்லது தகனம் செய்வதற்கான பொது மயானமாக இத்துடன் பிரகடனப்படுத்தப்படுகின்றது.*

லக்ஷ்மன் யாபா அபேவர்தன,
ஆளுநர்,
வடமேல் மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
குருநாகல்,
*2023, யூன் 14.*

**அட்டவணை**

*பொது வழங்குநருக்கு 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி எஸ். கங்காதரன் நொத்தாரிஸ் அவர்களினால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 14934 ஆம் இலக்க உறுதிப்பத்திரத்தினாலும் மற்றும் வேறு வகையில் உரிமையை தொடர்ந்து பயன்பெற்று வருகின்ற,*

*வடமேல் மாகாண புத்தளம் மாவட்டத்தின் சிலாபம் காணி பதிவு செய்தல் பிரிவினுள்ளான வடக்கு பிடிகல் கோரளையில், யகம்பத்துவ, சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள்ளும், சிலாபம் பிரதேச செயலக பிரிவினுள் 547 சீ - கொக்காவில் கிராம அலுவலர் பிரிவினுள்ளும் மற்றும் கொக்காவில் கிராமத்தில் அமைந்துள்ள கொக்காவில வத்த எனும் காணியான எல். எச். ஜே. அமரதீப என்ற நில அளவையாளரினால் 2018.09.17 ஆந் திகதி அளந்து ஒழுங்கமைக்கப்பட்ட 639 இலக்கத்திற்கான காணித்துண்டு லொட் 1B (மயானத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத் துண்டாக அடையாளம் காணப்பட்ட) :*

| | |
|---|---|
| வடக்கிற்கு | : மேலே கூறப்பட்ட 639 இலக்கத்திற்கான காணித் துண்டு 1A உம் ; |
| கிழக்கிற்கு | : மேலே கூறப்பட்ட 639 இலக்கத்திற்கான காணித் துண்டு 1C உம் ; |
| தெற்கிற்கு | : பாதையும் ; |
| மேற்கிற்கு | : மேலே கூறப்பட்ட 639 இலக்கத்திற்கான காணித் துண்டு 1D உம். |

*எல்லையாகிய பேர்ச் இருபது (ஏக். 00, றூட். 00, பர். 20) காணியும் அதற்கு உரித்துடைய அனைத்தும் உள்ளடங்கும்.*

*07 - 162*

# பதவிகள் - வெற்றிடம்

மேல் மாகாண பொது சேவை ஆணைக்குழு

## மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (திட்டமிடல்) I ஆம் தர உத்தியோகத்தர்களின் சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல்

மேல் மாகாண உள்ளூராட்சி தாபனங்களில் 2014, 2016, 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் எழுந்துள்ள மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) விசேட தர வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளை பூர்த்தி செய்து, மேல் மாகாண உள்ளூராட்சி தாபனங்களுக்கு இணைக்கப்பட்டு தற்போது கடமையாற்றும் மற்றும் ஓய்வுபெற்ற மேல் மாகாண பொது சேவையின் I ஆம் தர தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம் : 2023, ஓகத்து மாதம் 14.

**02. ஆட்சேர்ப்பு முறை**

I. 2020.07.24 ஆந் திகதி மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) பதவிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான நடைமுறையின் 10.3.3 பந்தியின் படி, 06 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் கீழ் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

II. மேல் மாகாண சபை பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறமையின் ஒழுங்கில் மற்றும், ஏனைய உரிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன என்பதை உறுதிப்படுத்திய பின்னர், மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய தாபனங்களில் மேல் மாகாணத்தின் அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) விசேட தர பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**03. இந்த பதவிக்குரிய சம்பளத் திட்டம்**

அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 - MN - 7 2016 இன் 04 ஆவது சம்பளப் படிமுறை
ரூ. 41, 580- 11 x 755 -18 x 1030 - 68,425.00

**04. தகைமை**

I. மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (திட்டமிடல்) I ஆம் தரத்தில் ஆகக் குறைந்தது ஆறு (06) ஆண்டுகள் உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஆறு (06) சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

II. பதவி உயர்வு திகதிக்கு முன்னைய ஐந்து (05) ஆண்டுகளில் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. அங்கீகரிக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீட்டு நடைமுறையின்படி பதவி உயர்வு திகதிக்கு முன்னைய ஆறு (06) ஆண்டுகளில் திருப்திகரமான செயல்திறன் மட்டம் அல்லது அதற்கு மேல் செயல்திறனை வெளிப்படுத்தியிருத்தல்.

IV. மூன்றாவது வினைத்திறன்கள் தடை தாண்டல் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல். (மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்பச் சேவை யாப்பு நடைமுறைக்கு வரும் 2013.06.01 ஆந் திகதி மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை (திட்டமிடல்) I ஆம் தர பதவி உயர்வு பெற்று ஐந்து (05) வருடங்களை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் III வினைத்திறன்காண் தடை தாண்டல் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. (ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையின் 08 ஆம் பந்தியின் குறிப்பு)

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் துறை மற்றும் புள்ளிகளின் அளவு

| புள்ளிகள் வழங்கப்படும் முக்கிய துறைகள் | புள்ளிகளின் அளவு | தேர்ச்சி புள் ளிகளின் அளவு |
|---|---|---|
| சேவை அனுபவம்<br>தொடர்புடைய அடிப்படை தகைமைக்கு மேலாக பூர்த்தி செய்துள்ள உயிர்ப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலம் | 50 | உரியதன்று |
| • சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா பாடநெறிகளுக்கு - 15 புள்ளிகள்<br>(சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா பாடநெறி இல்லாத படியால் சிவில் துறைக்குரிய டிப்ளோமா இதற்காக உரியதாக்கிக் கொள்ளப்படும் )<br>• சான்றிதழ் பாடநெறிகளுக்கு - 10 புள்ளிகள்<br>• உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகள்/சான்றிதழ்கள் - 05 புள்ளிகள்<br>• பெற்றுக் கொள்ளப்பட்ட பாராட்டுக்கள் மற்றும் மதிப்பீடுகள் போன்றவை - 05 புள்ளிகள்<br>• தாபன நடவடிக்கை பற்றிய அறிவு - 03 புள்ளிகள்<br>(தாபனக் கோவையின் VIII, XII, XIV மற்றும் XLVIII அத்தியாயங்கள் தொடர்பாக காணப்படும் அறிவினை பரிசோதிப்பதற்கான வாய்மூலமான சோதனை )<br>• தொழில் திறன் - 07 புள்ளிகள்<br>கட்டடக்கலை, கட்டமைப்பு நீர் வழங்கல், கழிவகற்றல் மற்றும் மின்சுற்று சாலை திட்டமிடல் பற்றிய அறிவை சோதிக்க வாய்வழி சோதனை மற்றும் வேலைத்தள ஆய்வுகளில் பங்கேற்பது மற்றும் அளவீடுகள் எடுப்பதைச் சரிபார்த்தல் (தாபனத் தலைவரின் பரிந்துரை கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | 45 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

06. மேல் மாகாண உள்ளூராட்சி தாபனங்களில் மேல் மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப சேவையில் (திட்டமிடல்) விசேட தர பதவி உயர்வுக்கான விண்ணப்பத்தை இந்த அறிவிப்பின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பதாரரால் சரியாகவும் தெளிவாகவும் தயாரிக்க வேண்டும்.

07. ஒவ்வொரு விண்ணப்பமும் உங்கள் திணைக்களத் தலைவரின் மூலம் 2023.08.07 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு (மே.மா.), இல. 628, 10 ஆவது மாடி, ஜன ஜய நகர கட்டடம், நாவல வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில், "மேல் மாகாண உள்ளூராட்சி தாபனங்களில் மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (திட்டமிடல்) விசேட தரப் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை" என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

08. விண்ணப்பம் கோரலுக்குரிய அறிவிப்பு தொடர்பான விடயங்கள் அல்லது மேற்படி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏனைய விடயங்கள் தொடர்பாக மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதியானது.

09. இந்த விளம்பரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.psc.gov.lk இல் வெளியிடப்பட்டுள்ளது.

திலக் செனரத்,
செயலாளர்,
மாகாண பொது சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

2023, யூலை 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையில் (திட்டமிடல்) விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல் (சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில்)**

(அலுவலரினால் பூரணப்படுத்துவதற்காக)

1. பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........................................................................................

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் : ..........................................................................................

3. தற்போது கடமையாற்றும் திணைக்களம் மற்றும் அதன் முகவரி : ..........................................................................................
..........................................................................................

4. தற்போதைய கடமை நிலையம் மற்றும் அதன் முகவரி : ..........................................................................................
..........................................................................................

5. சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ..........................................................................................

6. தொலைபேசி இலக்கம் : கடமை - ................................................. தனிப்பட்ட - ..........................

7. ஆண் /பெண் : ..........................................................................................

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ..........................................................................................

9. மேல் மாகாண அரசாங்க சேவையில் உள்வாங்கப்பட்ட திகதி : ..........................................................................................

10. மேல் மாகாண தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) I ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி : ........... நியமனக் கடிதத்தின் தொடர்பு இலக்கம் மற்றும் திகதி : ..........................................................................................

11. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்படும் திகதிகளில் மேல் மாகாண தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) I ஆம் தரத்தின் சேவைக் காலம் :

| திகதி | சேவைக்காலம் | | |
|---|---|---|---|
| | வருடம் | மாதம் | நாள் |
| 2014.12.31 | | | |
| 2016.12.31 | | | |
| 2017.12.31 | | | |
| 2020.12.31 | | | |

12. தொழில்முறை தகைமைகள் :

| தொடர் இலக்கம் | சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா பாடநெறி அல்லது சிவில் துறைக்குரிய டிப்ளோமா சான்றிதழ் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |

13. சான்றிதழ் பாடநெறி ( திட்டமிடல் துறைக்குரிய) :

| தொடர் இலக்கம் | சான்றிதழ் பாடநெறி | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| | | |
| | | |

14. சம்பந்தப்பட்ட துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விருதுகள் /சான்றிதழ்கள் :

| சம்பந்தப்பட்ட துறையில் பெற்றுள்ள விருதுகள் /சான்றிதழ்கள் | விருதுகளின் /சான்றிதழ்களின் பெயர் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|
| பெற்றுள்ள உள்நாட்டு விருதுகள் | | |
| பெற்றுள்ள வெளிநாட்டு விருதுகள் | | |
| பெற்றுள்ள சான்றிதழ்கள் | | |

15. உரிய துறையில் தொழில்முறை திறனை நிரூபிக்க கடமைகளை மேற்கொள்ளும் போது காட்டப்பட்ட உயிர்ப்பான பங்களிப்பின் விவரங்கள்:

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

16. 2014.12.31 , 2016.12.31,2017.12.31, 2020.12.31 (பொருத்தமற்ற ஆண்டுகளை ஒரே கோட்டினால் வெட்டி விடுங்கள் ) இற்கு முன்னைய 05 ஆண்டுகளினுள் அனைத்து சம்பள ஏற்றங்களும் பெறப்பட்டுள்ளது /இல்லை ...................................
இல்லை என்றால் அதற்கு காரணங்களை குறிப்பிடவும்.

.........................................................................................................................................

.........................................................................................................................................

17. 2014.12.31, 2016.12.31, 2017.12.31, 2020.12.31 (பொருத்தமற்ற ஆண்டுகளை ஒரே கோட்டினால் வெட்டி விடுங்கள்) இற்கு முன்னைய 05 ஆண்டுகளினுள் சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்டுள்ளது / இல்லை .............................
பெறப்பட்டுள்ளது என்றால் அதற்கு காரணங்களை குறிப்பிடவும்).

.........................................................................................................................................

.........................................................................................................................................

18. 2014.12.31 ,2016.12.31,2017.12.31, 2020.12.31(பொருத்தமற்ற ஆண்டுகளை ஒரே கோட்டினால் வெட்டி விடுங்கள்) இற்கு முன்னைய 05 ஆண்டுகளினுள் சேவை காலத்தினுள் ஏதாவது ஒழுக்காற்று தண்டனை கிடைக்கப் பெற்றதா? .....................

18.1 நீங்கள் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளீர்களா அல்லது அவ்வாறு உட்படப் போகிறீர்களா?
.........................................................................................................................................

18.2 அப்படி என்றால் அதற்குரிய விபரங்களை குறிப்பிடவும். ...................................................................

19. விண்ணப்பதாரரின் சான்றுரை

இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ள நான் தகுதியுடையவன் என்றும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும், 2020.07.24 ஆந் திகதி மேல் மாகாண ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான, ஒழுங்கு விதியின் 10.3.3 பந்தியின் படி நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், நேர்முகப் பரீட்சைக்கு முன், நேர்முகப் பரீட்சையின் போது அல்லது அதற்குப் பின் எனது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்காக எடுக்கும் எந்தவொரு முடிவுக்கும் நான் இணங்குகிறேன். மேலும் இந்த நேர்முகப் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வகுத்துள்ள விதிகளுக்கும், நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பதவி உயர்வு தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

...............................................
அலுவலரின் கையொப்பம்

திகதி : ................................

20. தாபனத் தலைவரின் சான்றுரை

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் மேல் மாகாண தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) I ஆம் தர உத்தியோகத்தர் திரு./திருமதி/செல்வி. ................................ அவர்கள் ................................ ஆந் திகதி தொடக்கம் இந்த அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றும், ................................ ஆந் திகதி மேல் மாகாண தொழில்நுட்ப சேவையின் (திட்டமிடல்) I ஆம் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு, மேல் மாகாண ஆளுநரினால் 2020.07.24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண தொழில் நுட்ப சேவையின் ( திட்டமிடல்) பதவிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுக்கான நடைமுறையின் 10.3.3 பந்தியின் படி தகுதியுள்ள தினத்தில் எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் இந்தக் காரியாலயத்தில் காணப்படும் அறிக்கைகளுடன் நான் தனிப்பட்ட முறையில் பரிசோதித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் இங்கு சான்றுப்படுத்துகின்றேன்.

...............................................
தாபனத் தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி : ................................

21. திணைக்களத் தலைவரின் பரிந்துரை :

மேலே உள்ள பரிந்துரையுடன் இணங்குகிறேன் /இணங்கவில்லை.

...............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி : ................................

22. அமைச்சு செயலாளரின் பரிந்துரை :

மேலே உள்ள பரிந்துரையுடன் இணங்குகிறேன் /இணங்கவில்லை.

.............................................
அமைச்சின் செயலாளரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி : ................................

23. பிரதம செயலாளரின் பரிந்துரை :

மேலே உள்ள பரிந்துரையுடன் இணங்குகிறேன் /இணங்கவில்லை.

.............................................
பிரதம செயலாளரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி : ................................

07 - 85

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.